**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.82/2025**

**Deposition of Witness for Prosecution PW 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மகாலெட்சுமி | Husband's Name | : | விஜயகுமார் |
| Village | : | வடக்குபட்டம் | Taluk | : | வலங்கைமான் |
| Calling | : | | Age | : | 30 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 25th day of October 2025.**

**(A2 to A4 present. A1 died).**

**முதல் விசாரணை**

நான் தற்போது வடக்குபட்டத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1, அ.சா.2 என் பெற்றோர், அ.சா.3 என் சகோதரர், அ.சா.4 என் பெரியப்பா. 19.05.2017 ம் தேதி இரவு என் தலையில் காயம் ஏற்பட்டது. கூட்டத்தில் இருந்தவர்கள் யாரோ என்னை அடித்தார்கள், யார் அடித்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. அந்த கூட்டத்தில் இருந்தவர்கள் ஆஜர் எதிரிகள் அல்ல. போலீசார் விசாரித்தார்கள்.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 05.04.2017 ம் தேதி பெரியசாமி சகளை மகள் சீத்தளாதேவி என் தம்பி மீது ஹரித்துவாரமங்களம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அந்த வழக்கு நீடாமங்கலம் நீதிமன்றத்தில் நடந்து வருகிறது எனவும் 19.05.2017 ம் தேதி இரவு 8.00 மணிக்கு நான், எனது அப்பா, அம்மா மற்றும் சகோதரருடன் வீட்டில் இருந்தோம் எனவும் அப்போது எங்கள் தெருவை சேர்ந்த கருப்பையன் சகளை பெரியசாமி, சதாசிவம் மகன் சரவணேஷ், ராமதாஸ் மகன் மனோரஞ்சன், பன்னீர்செல்வம் மகன் அறிவழகன் ஆகியோர் கையில் அருவாள் மற்றும் கட்டைகளுடன் என் வீட்டு வாசலுக்கு வந்து ஏன்டா தேவடியா, குச்சிகாரி மகன்களா கருப்பையன் மகள் சீத்தளாதேவிகிட்ட தகராறு செய்துவிட்டு அப்பனும் மகனும் ஜாலியா இருக்கீங்களா என சொல்லி சரவணேசும் அறிவழகனும் தங்கள் கையில் வைத்திருந்த அரிவாளால் எனது அப்பாவின் இடது பக்க தலையில் சரவணேஷ் வெட்டினான் எனவும் மனோரஞ்சனும் பெரியசாமியும் தாங்கள் வைத்திருந்த கட்டையால் எனது அப்பாவின் இடது கை மற்றும்

வலது கால் ஆகிய இடங்களில் மாறி மாறி அடித்தார்கள் எனவும் அவர்கள் வெட்டியதில் என் அப்பாவிற்கு தலையிலிருந்து இரத்தம் கொட்டியது எனவும் இதை பார்த்த என் தம்பி ஏன்டா இப்படி செய்றீங்க என கேட்டதற்கு அறிவழகன் தான் வைத்திருந்த அரிவாளால் என் தம்பியின் வலதுபக்க தலையில் வெட்டினான் எனவும் அதில் என் தம்பியின் தலையிலிருந்து இரத்தம் கொட்டியது எனவும் அதை தடுக்க வந்த என் சித்தப்பா சின்னையனை பெரியசாமி தன் கையில் வைத்திருந்த கட்டையால் உச்சி மண்டையில் ஓங்கி அடித்ததில் சின்னையனின் மண்டை உடைந்தது எனவும் உடனே 4 பேரும் எனது வீட்டை தீ வைத்து கொளுத்தினார்கள் எனவும் வீடு எரிந்ததை பார்த்த அக்கம் பக்கத்தினர் ஓடிவந்தார்கள் எனவும் அவர்களை பார்த்ததும் கையில் வைத்திருந்த அரிவாள் மற்றும் கட்டையை காட்டி உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என மிரட்டி சென்றார்கள் எனவும் எங்கள் ஊர் தியாகராஜன் 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து அவர்கள் மூவரையும் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள் எனவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. எதிரிகள் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.10.25 14:35:15 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.82/2025

**Deposition of Witness for Prosecution PW 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மகேந்திரன் | Father's Name | : | சுப்பிரமணியன் |
| Village | : | வடக்குபட்டம் | Taluk | : | வலங்கைமான் |
| Calling | : | | Age | : | 47 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 25th day of October 2025.**

**(A2 to A4 present. A1 died).**

**முதல் விசாரணை**

நான் தற்போது வடக்குபட்டத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 20.05.2017 ம் தேதி காலை 10.30 மணியளவில் நானும் செல்வராஜ் என்பவரும் கரைமேட்டு தெருவிற்கு போகும்போது முதல்நாள் மாரியப்பன் வீட்டில் நடந்த சம்பவம் சம்மந்தமாக போலீசார் பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜரில் நான் முதல் சாட்சியாகவும் செல்வராஜ் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து செய்தோம். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.2**. என்னுடன்

கையெழுத்து செய்த செல்வராஜ் தற்போது உயிருடன் இல்லை. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

அ.சா.ஆ.2 ல் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. நான் வீட்டிலிருந்தபோது காவல் துறையினர் கேட்டதால் கையெழுத்து போட்டேன்.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.10.25 14:35:23 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.